இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் பட்டமேல் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2023

**SNP8244/SNP8334 – விசேட நிலைமைகள் மற்றும் கற்றல் தேவைகளுக்கான அறிமுகம்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 16.12.2023 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடைதருக.

## பகுதி – I

1. விசேட கல்வியைப் பெறத் தகுதியுள்ள பிள்ளைகளின் ஐந்து (05) வகைகளைப் பட்டியலிட்டு, அவர்கள் பெறக்கூடிய சேவைகளுக்கான உதாரணங்களை முன்வைக்குக.
2. பொதுவான செவிப்புல இழப்பின் மூன்று (03) வகைகளைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றைச் (01) சுருக்கமாக விளக்குக.
3. பெருமூளை வாதம் (CP) ஏற்படுவதற்கான ஐந்து (05) காரணங்களைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றைச் (01) சுருக்கமாக விளக்குக.
4. தசைநார் அலர்ச்சிக்கான (Muscular Dystrophy) நான்கு (04) காரணங்களைப் பட்டியலிடுக.
5. மூன்று (03) வகையான நீரிழிவு நோய்களைக் குறிப்பிட்டுக் குழந்தைகளிடையே காணப்படும் மிகவும் பொதுவான வகை நீரிழிவு நோய்களைக் குறிப்பிட்டுக் குழந்தைகளிடையே காணப்படும் மிகவும் பொதுவான வகை நீரிழிவு நோயை அதன் அறிகுறிகளுடன் விளக்குக.
6. உள்ளடங்கல் வகுப்பறையில் கீழ்வாத இதய நோயால் பாதிக்கப்பட்ட (Rheumatic Heart Disease) குழந்தைகளுக்கு வழங்கக் கூடிய ஐந்து (05) வகுப்பறை உதவிகளைப் பரிந்துரை செய்க.
7. குறுந்தலைக் (Microcephaly) குறைபாட்டின் ஐந்து (05) பொதவான அறிகுறிகளைக் குறிப்பிட்டு இக்குறைபாடு எவ்வாறு ஏற்படுகிறது என்பதை சுருக்கமாக விளக்குக.
8. பேசமுடியாது திணறும் (Stammering) பிரச்சினையுள்ள மாணவர்களுக்கு ஆசிரியர்களால் வழங்கக்கூடிய ஐந்து (05) வகுப்பறை உதவிகளை விளக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

09.

**i.** "ஆரோக்கியக் குறைபாடு" (Health Impairment) என்ற பதத்தை வரைவிலக்கணப்படுத்துக.

**(03 புள்ளிகள்)**

**ii.** எவையேனும் மூன்று (03) வகையான பொதுவான ஆரோக்கியக் குறைபாடுகளைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றைச் (01) சுருக்கமாக விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**iii.** நீங்கள் கை – கால் வலிப்பு உள்ள மாணவர்களுக்குக் கல்வி உதவிகள் வழங்கும் ஆசிரியர் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். அவர்களின் கற்றல் தொடர்பாக நீங்கள் அவதானித்த மூன்று (03) தடைகளை பட்டியலிட்டு அவற்றுக்கு எவ்வாறு உதவலாம் என்பதை விளக்குக.

**(12 புள்ளிகள்)**

10.

**i.** குறிப்பான கற்றல் இயலாமைகளின் (Specific Learning Disabilities) மூன்று (03) முக்கிய வகைகளைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றை சுருக்கமாக விளக்குக. **(03 புள்ளிகள்)**

**ii.** மேலே குறிப்பிட்டுள்ள மூன்று (03) குறிப்பான கற்றல் இயலாமைகளின் ஆரம்பக்கட்ட எச்சரிக்கை அறிகுறிகளை விளக்குக. **(05 புள்ளிகள்)**

**iii.** நீங்கள் கற்றல் இயலாமைகள் உள்ள மாணவர்களின் ஆசிரியர் என்று வைத்துக் கொண்டு, இம்மாணவர்களின் உள்ளடங்கல் வகுப்பறையில் செயல்படுத்தக்கூடிய ஐந்து (05) சிறந்த நடைமுறைகளை ஆராய்க. **(13 புள்ளிகள்)**

11.

**i.** பேச்சு ஒழுங்கீனங்களின் மூன்று (03) முக்கிய வகைகளைக் குறிப்பிடுக. **(06 புள்ளிகள்)**

**ii.** ஆசிரியராக, மாணவர்களிடையே மேலே உள்ள பேச்சுக் ஒழுங்கீனங்களை நீங்கள் எவ்வாறு அடையாளம் காண முடியும் என்பதை எடுத்துக்காட்டுக்களை முன்வைத்து விளக்குக. **(05 புள்ளிகள்)**

**iii.** உங்கள் வகுப்பறையில் பேச்சு ஒழுங்கீனங்களுடைய மாணவர்களுக்கு நீங்கள் எவ்வாறு உதவிகளை வழங்கலாம் என்பதை விவரிக்குக. ஒவ்வொரு பேச்சு ஒழுங்கீனத்திற்கும் மூன்று (03) பரிந்துரைகளைப் பரிந்துரை செய்க. (12 புள்ளிகள்)

12.

**i.** சட்டபூர்வ குருட்டுத்தன்மை என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. **(03 புள்ளிகள்)**

**ii.** குழந்தைகளிடையே நீங்கள் அவதானிக்கக்கூடிய மூன்று (03) பொதுவான பார்வைக் குறைபாடுகளை விளக்குக. **(05 புள்ளிகள்)**

**iii.** பார்வைக் குறைபாடுள்ள குழந்தைகளுக்குக் கற்பிக்கும் போது நீங்கள் எதிர்கொள்ளும் ஐந்து (05) சவால்களை விவரித்து, அந்தச் சவால்களை எவ்வாறு வெற்றி கொண்டீர்கள் என்பதை விளக்குக. **(12 புள்ளிகள்)**

13.

**i.** இடையூறு விளைவிக்கும் (Disruptive) நடத்தைக் ஒழுங்கீனம் என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. **(02 புள்ளிகள்)**

**ii.** குழந்தைகளிடையே உள்ள மூன்று (03) வகையான நடத்தை ஒழுங்கீனங்களைக் குறிப்பிடுக. **(03 புள்ளிகள்)**

**iii.** மேற்கண்ட மூன்று (03) வகையான நடத்தை ஒழுங்கீனங்களைப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் விவரிக்குக.

01. நடத்தை ஒழுங்கீனத்துக்கான காரணங்கள்
02. நடத்தை ஒழுங்கீனத்தின் பண்புகள் - ஒவ்வொன்றிற்கும் தலா ஐந்து (05)
03. வகுப்பறையில் நடத்தை முகாமைத்துவ உத்திகள் - ஒவ்வொன்றிற்கும் தலா ஐந்து (05)

**(15 புள்ளிகள்)**

14. "ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இயலுமை ஆட்சிகளில் சிறந்த திறனாக மீத்திறன் உள்ள நிலை கருதப்படுகின்றது." **(Gagne, 1996)**

i. "மீத்திறனுள்ளவர்" (Gifted) "ஆற்றலுடையவர்" (Talented) ஆகிய பதங்களை வரைவிலக்கணப்படுத்துக. **(03 புள்ளிகள்)**

ii. மீத்திறனுடைய மாணவர்களிடம் காணப்படக்கூடிய ஐந்து (05) குணாதிசயங்களைக் குறிப்பிட்டு அவற்றில் மூன்றைப் (03) பொருத்தமான உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

iii. உள்ளடங்கல் வகுப்பறையில் மீத்திறனுள்ள மற்றும் ஆற்றல்மிகு மாணவர்களுக்கு ஆசிரியர்கள் எவ்வாறு உதவ முடியும் என்பதை ஆராய்க. **(08 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -